**<u>கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,</u>**
**<u>விருதுநகர் மாவட்டம் (இருப்பு) திருவில்லிபுத்தூர்</u>**

**O.S.No.195/2023** **நாள்– 13.11.2025.**

1ம் வாதி பரமசிவம் நாடார் ஆஜராகி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு அவர் மூலம் இன்று சாட்சிய பிரமாண பத்திரிக்கையை தாக்கல் செய்யப்பட்டு வா.சா. 1 ன் வாக்குமூலம் 1989ம் ஆண்டு சாட்சிய சட்டம் 44வது ஏற்பாட்டின்படிகிரேடு 1 பெஞ்ச் கிளார்க் K.தமிழ்செல்வி என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பரமசிவம் நாடார் | தாலுகா | |
| த–பெ | சீனியப்பன் | தொழில் | |
| கிராமம் | சொக்கநாதன்புத்தூர் | வயது | 83 |

**<u>முதல் விசாரணை</u>**

எனது சாட்சிய பிரமாண பத்திரிக்கையை பொறுத்து முதல் விசாரணை வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அதில் உள்ள விவரங்கள் எனக்குத் தெரியும்.

**<u>வாதி தரப்பு சான்றாவணங்கள்</u>**

1) 16.09.1974ம் தேதியிட்ட எனது மாமியாரும், 2, 3 வாதிகளின் பாட்டியுமான பார்வதியம்மாளும் நானும் ஒரு பாக்கியலட்சுமி வகையறாவிடமிருந்து கிரையம் பெற்ற கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.1**.

2) 21.07.1986ம் தேதியிட்ட எனது மாமியாரும், 2, 3 வாதிகளின் பாட்டியுமான பார்வதியம்மாள் எங்களுக்கு ஆதரவாக எழுதி வைத்த உயில் பத்திரம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.2**.

3) 16.08.2018ம் தேதியிட்ட எனது மாமியாரும், 2, 3 வாதிகளின் பாட்டியுமான பார்வதியம்மாள் இறப்பு சான்று உண்மை நகல் **வா.சா.ஆ.3**.

4) 13.02.2002ம் தேதியிட்ட பார்வதியம்மாளின் மகளான மாரியம்மாளுக்கு வழங்கப்பட்ட வாரிசு சான்று உண்மை நகல் **வா.சா.ஆ.4**.

5) 23.12.2015ம் தேதியிட்ட எனது மனைவியும், 2, 3 வாதிகளின் தாயாருமான மாரியம்மாளின் இறப்பு சான்று உண்மை நகல் **வா.சா.ஆ.5**.

6) 22.04.2016ம் தேதியிட்ட எனது மனைவியும், 2, 3 வாதிகளின் தாயாருமான மாரியம்மாளின் வாரிசு சான்று உண்மை நகல் **வா.சா.ஆ.6**.

7) 09.09.2013ம் தேதியிட்ட 1ம் வாதியின் ஆதார் அட்டை உண்மை நகல் **வா.சா.ஆ.7**.

8) 11.09.2013ம் தேதியிட்ட 2ம் வாதியின் ஆதார் அட்டை உண்மை நகல் **வா.சா.ஆ.8**.

9) 24.09.2013 ம் தேதியிட்ட 3 ம் வாதியின் ஆதார் அட்டை உண்மை நகல் **வா.சா.ஆ.9**.

10) 14.06.2008 ம் தேதியிட்ட தபசில் சொத்தை பொறுத்து 2 ம் வாதி அனுபவ சுவாதீனத்தில்இருந்ததற்கு கிராம நிர்வாக அலுவலர் வழங்கிய அனுபவ சான்று தாக்கல்.

11) நாங்கள் வழக்கு சொத்தில் விவசாயம் செய்துள்ளதை காட்டக்கூடிய புகைப்படங்கள் தாக்கல்.

12) 30.04.2009 ம் தேதியிட்ட வழக்கு சொத்தை பொறுத்து 1 முதல் 3 பிரதிவாதிகளின் தாயார் பார்வதியம்மாள் 1 ம் பிரதிவாதிக்கு எழுதி வைத்த செட்டில்மெண்ட் பத்திரம் ஆவணம் எண.1160/2009 சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.10**.

13)30.04.2009 ம் தேதியிட்ட வழக்கு சொத்தை பொறுத்து 1 முதல் 3 பிரதிவாதிகளின் தாயார் பார்வதியம்மாள் 2 ம் பிரதிவாதிக்கு எழுதி வைத்த செட்டில்மெண்ட் பத்திரம் ஆவணம் எண.1162/2009 சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.11**.

14) 30.04.2009 ம் தேதியிட்ட வழக்கு சொத்தை பொறுத்து 1 முதல் 3 பிரதிவாதிகளின் தாயார் பார்வதியம்மாள் 3 ம் பிரதிவாதிக்கு எழுதி வைத்த செட்டில்மெண்ட் பத்திரம் ஆவணம் எண.1161/2009 சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.12**.

15) 22.04.2023 ம் தேதியிட்ட வழக்கு சொத்தை பொறுத் 5 ம் பிரதிவாதி 1 ம் பிரதிவாதிக்கு வழங்கிய பட்டா (பட்டா எண்.1566) கணினி நகல் **வா.சா.ஆ.13**.

16) 22.04.2023 ம் தேதியிட்ட வழக்கு சொத்தை பொறுத் 5 ம் பிரதிவாதி 2 ம் பிரதிவாதிக்கு வழங்கிய பட்டா (பட்டா எண்.1548) கணினி நகல் **வா.சா.ஆ.14**.

17) 25.04.2023 ம் தேதியிட்ட வழக்கு சொத்தை பொறுத் 5 ம் பிரதிவாதி 3 ம் பிரதிவாதிக்கு வழங்கிய பட்டா (பட்டா எண்.1547) கணினி நகல் **வா.சா.ஆ.15**.

18) 13.04.2023 ம் தேதியிட்ட வழக்கு தபசில் சொத்தின் அயிட்டம் 1 ம் பொறுத்து 1 ம் பிரதிவாதி 4 ம் பிரதிவாதிக்கு கிரையம் செய்த கிரைய பத்திரத்தின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.16**.

19) 29.07.2023 ம் தேதியிட்ட வழக்கு தபசில் சொத்தின் அயிட்டம் 1 ம் பொறுத்து 5 ம் பிரதிவாதி 4 ம் பிரதிவாதி பெயருக்கு வழங்கிய பட்டா கணினி நகல் **வா.சா.ஆ.17**.

20) 28.04.2023 ம் தேதியிட்ட தபசில் சொத்தை பொறுத்து 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு பட்டா மற்றும் தீர்வை வழங்கக்கூடாது என்று 3 ம் வாதி 5 ம் பிரதிவாதியிடம் கொடுத்த புகார் மனு மற்றும் ஒப்புகை சீட்டு நகல் மற்றும் அசல் **வா.சா.ஆ.18**.( 2 அஞ்சலக ஒப்புதல் அட்டையுடன்)

21) 19.05.2023 ம் தேதியிட்ட 1 ம் பிரதிவாதி 4 ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த போலி கிரைய பத்திரத்தை பொறுத்து தகந்த விசாரணை மேற்கொள்ள 6 ம் பிரதிவாதி 5 ம் பிரதிவாதிக்கு அனுப்பிய நடவடிக்கை கடிதம் (ந.க.ஆ.2.14702/2022) உண்மை நகல் **வா.சா.ஆ.19**.

22) 02.05.2023 ம்தேதியிட்ட 3 ம் பிரதிவாதி 1 முதல் 3 பிரதிவாதிகள் மேற்கண்ட போலி ஆவணங்கள் குறித்து விருதுநகர் மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளிடம் கொடுத்த புகார் மனுவிற்கு வழங்கிய ஒப்புதல் அட்டை அசல் **வா.சா.ஆ.20**.

**(குறுக்குவிசாரணை 1 முதல் 4 மற்றும் 5 முதல் 8 எதிர்வாதிகள் தரப்பில் வேண்டுதல் பேரில் ஒத்திவைக்கப்படுகிறது)**

**சாட்சியின் கையொப்பம்**

**Name of the Interpreter : Not necessary**

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1989 (Central Act 44 of 1989 on the 13th day of November 2025.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு. தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் செய்யப்பட்டது.

கூடுதல் மாவட்ட நீதிபதி,
கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,
ஸ்ரீவில்லிபுத்தூர்.